பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரமோதூத ஹூ பங்குனி ௴ 19 உ செவ்வாய்க்கிழமை [02-04-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 129

# செஞ். அதிகாரிகளிடம் இன்று 23 சடலங்களும் ஒப்படைப்பு

## பருத்தித்துறைக் கடற்பகுதியில் வைத்து நண்பகல் படையினர் பொறுப்பேற்பர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2

கடந்த சனியன்று மன்னார் வேப்பங்குளத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்த படையினரில் 23 பேரின் சடலங்களையும் மனிதாபிமான அடிப்படையில் ஸ்ரீலங்கா அரசிடம் ஒப்படைக்க விடுதலைப் புலிகள் முன்வந்திருப்பதாக அறிய வருகிறது.

இன்று காலை எட்டு மணிக்கு விடுதலைப் புலிகள் இந்த 23 சடலங்களையும் யாழ்ப்பாணத்தில் வைத்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் ஒப்படைப்பர் என்றும் —


அவர்கள் சடலங்களைப் பொறுப்பேற்றுக் கொண்டு சென்று, இன்று நண்பகல் 2 மணியளவில் பருத்தித்துறைக் கடற் பகுதியில் வைத்து ஸ்ரீலங்கா படையினரிடம் ஒப்படைப்பர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மக்களின் பார்வைக்கு நேற்று வைக்கப்பட்டிருந்த சடலங்களை, விடுதலைப் புலிகள் இயக்க உயர்மட்டத் தலைவர்கள் இன்று உத்தியோகபூர்வமாக செஞ்சிலுவை அதிகாரிகளிடம் கையளிப்பர்.

மனிதாபிமான அடிப்படையில் சடலங்களை ஒப்படைக்க விடுதலைப் புலிகள் இணங்கியிருப்பதாகவும்—

அவற்றைப் பொறுப்பேற்க ஸ்ரீலங்கா அரசு பச்சைச் கொடி காட்டியிருப்பதாக

[6 ஆம் பக்கம் பார்க்க]





வேப்பங்குளத்தில் பலியான இராணுவத்தினரின் சடலங்கள், பிரேதப் பெட்டிகளில் அடுக்கி வைக்கப்பட்டிருப்பதை மேலே உள்ள படத்திலும்—

அந்த விடுதலைப்புலிகளினால் கைப்பற்றப்பட்டு மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்ட ஆயுதங்களில் ஒரு பகுதியை கீழே உள்ள படத்திலும் காணலாம். [அ]

மற்றும் படங்கள் 5 ஆம் பக்கத்தில்]

## கொள்ளையில் ஈடுபட்ட தமிழ்குழு கொழும்பில் கைது

கொழும்பில் பலகொள்ளைகளை நடத்தி வந்தவர்கள், முன்னர் போராளிகள் குழுவாக இருந்து இப்போது கொழும்பில் இயங்கும் ஒரு தமிழ்க் குழுவைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பில் பலகொள்ளைகளை நடத்தி வந்ததாகக் கூறப்படும் எட்டுப்பேர் கொண்ட கோஷ்டி ஒன்றை வெள்ளவத்தைப் பொலீஸார் கைது செய்தனர்

மட்டக்களப்பைச் சேர்ந்த இந்தக் கோஷ்டியின் தலைவராக ரிசர்வ் பொலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் செயற்பட்டு வந்தார். இக்கோஷ்டியைச் சேர்ந்தவர்களில் இருவர் யுவதிகள்.

கொழும்பில் பல வீடுகளில் லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான தங்கநகைகளை இக்கோஷ்டியினர் கொள்ளையிட்டது தெரிய வந்திருக்கிறது. என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட கோஷ்டியினர் தேடுதல் நடத்துவது என்ற பேரில் வீடுகளுக்குள் புகுந்து கொள்ளைகளை நடத்தியதாகவும் பொலீஸார் கூறினர். [அ.எ]

## இரு அதிகாரிகள் உட்பட 25 படையினர் உயிரிழப்பு

மன்னார் மாவட்டம்-வேப்பங்குளம் பகுதியில் கடந்த சனிக்கிழமை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு அதிகாரிகள் உட்பட 25 அரசப் படையினர் கொல்லப்பட்டனர் என்பதை கொழும்பு இராணுவ வட்டாரங்கள் நேற்று உறுதி செய்தன.

இத்தகவலை இந்திய வானொலி வெளியிட்டது.

## 12 தமிழர்களின் சடலங்கள் மட்டக்களப்பு வீதியில்

வண்டன், ஏப் 2

மட்டக்களப்புக்கு வடக்கே வீதியோரத்தில் சூட்டுக்காயங்களுடனும், வெட்டப்பட்டு துண்டங்களாக்கப்பட்ட நிலையில் 12 தமிழரின் சடலங்கள் நேற்றுக் காணப்பட்டதாக பி.பி.ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

நேற்று முன்தினம் அந்தப் பகுதியில் சைக்கிளில் ரோந்து சென்ற பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சுட்டுக் கொல

[6 ஆம் பக்கம் பார்க்க]

## படையினரின் சடலங்களை மக்கள் பார்வையிட்டனர்

### மீட்கப்பட்ட ஆயுதங்களும் காட்சிக்கு

யாழ்ப்பாணம், ஏப்.2

வேப்பங்குளத்தில் இடம் பெற்ற மோதலில் பலியான 23 படையினரின் சடலங்களும் அம்மோதலின் போது விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் மக்களின் பார்வைக்காக நேற்று நல்லூர் முத்திரைச் சந்தையில் வைக்கப்பட்டிருந்தன.

அங்கு இதற்கென அமைக்கப்பட்ட விசேட பந்தலில் காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை பெட்டிகளில் வரிசையாக சடலங்கள் வைக்கப்பட்டிருந்தன.

பெரும் எண்ணிக்கையான மக்கள் இவற்றைப் பார்வையிட்டுச் சென்றனர். [உ-3]

## முச்சந்தி முரளி



உவையள் இங்கை காட்டின கைவரிசையை அங்கையும் காட்டப் பாத்திருப்பினம்...!

# கை, கால்களை இரும்புச் சங்கிலியால் கட்டி படுக்க வைத்த பின் மின்சாரச் சித்திரவதை

## ஸ்ரீலங்கா கடற்படை கைது செய்தவர்கள் அனுபவித்த வேதனை

— உதயன் புளியங்கூடல் செய்தியாளர் —

புளியங்கூடல், ஏப். 2

அகதிகளாக தமிழ்நாட்டுக்குச் செல்ல முற்பட்டு, ஸ்ரீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்படும் பொது மக்கள் மிகக் கொடூரமான முறையில் சித்திரவதை செய்யப்படுகின்றனர்.

காங்கேசன்துறை படை முகாமில் வைத்து இளைஞர்கள், நடுத்தர வயதினர் என்ற வேறுபாடு இல்லாமல் நடத்தப்படும் சித்திரவதைகள் பெரும் மனித உரிமை மீறல்களாகும்.

★ கைகள், கால்களை சங்கிலிகளால் கட்டி, படுக்க வைத்துவிட்டு, இரண்டு கால்களிலும் உள்ள பெரு விரல்களில் மின்சாரம் பாய்ச்சுகிறார்கள்.

★ கைகளை உயர்த்தச் சொல்லி, அவற்றை அகல விரித்த நிலையில் கம்பியால் கட்டுகிறார்கள். பின்னர் காலில் கட்டி தலை கீழாகத் தொங்க விடுகிறார்கள்.

★ அப்படித் தொங்க விட்ட பின்னர், முகத்தை துணியால் மூடிக்கட்டி, கடல் நீரை அள்ளி முகத்தில் ஊற்று

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## கண்டு பிடிக்கப்பட்டுள்ளது

உடுவில் வடக்கு வயலில் 28-3-91 விவசாயியினால் பசுமாடு ஒன்று பிடிக்கப்பட்டு உடுவில் குளம் விவசாயிகள் நலன்புரிச் சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும். தவறின் 7-4-91 பி.ப 4 மணிக்கு உடுவில் அம்மன் கோவிலடியில் ஏலத்தில் விற்கப்படும். [16279]

## சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள் ''சக்தி சரவணா'' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக) தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை [16278]

## இராமநாதன் கல்லூரி சாதனை

யாழ்ப்பாணம், ஏப். 2

மருதனார்மடம் கோட்டப் பாடசாலைப் பிரிவினால் நடத்தப்பட்ட தமிழ் மொழித் தினப் போட்டியில், சுன்னாகம் இராமநாதன் கல்லூரி ஐந்து போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றது.

செல்வி. சதீஸ்வரி சண்முகலிங்கம், செல்வி. கோமகள் அருணகிரி, செல்விகிருஷாந்தி செல்வரத்தினம், செல்வி சாருமதி விநாயகமூர்த்தி. ஆகியோர் முறையே வாசிப்பு பேச்சு, பேச்சு, பாஓதல், போட்டிகளில் முதலிடத்தைப் பெற்றனர்.

நாட்டிய, நாடகப் போட்டியிலும் இக்கல்லூரிக்கே முதலிடம் கிடைத்தது. [இ - த]

## போலி விஸாக்களுடன் இலங்கை தமிழர் கைது

கொழும்பு, ஏப்ரல் 2

போலி வீஸாக்களுடன் லண்டனுக்குச் செல்ல முயற்சித்தனர் என்று கூறப்படும் நான்கு இலங்கைத் தமிழர்களை இரகசியப் பொலீஸார் கடந்த சனிக்கிழமை கைது செய்தனர்.

அவர்களில் ஒருவர் பெண்,

அந்த நால்வரும் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் எயர்லங்கா விமானம் ஒன்றில் ஏற முயற்சிசிக்கையில் கைது செய்யப்பட்டனர். [இ-எ]

## சாரண தலைவர் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2

சாரணர் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட கிளை, குருளைச் சாரணர் தலைவர்கள், சாரணர் தலைவர்களுக்கான ஆதாரப் பயிற்சி நெறி - அவத்தை II ஐ நடத்த உள்ளது.

இப் பயிற்சி நெறியானது யாழ். கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் இம் மாதம் 15 ஆம் திகதி காலை 8 மணிக்கு ஆரம்பமாகி 17 ஆம் திகதி மாலை 4-30 மணிக்கு முடிவுறும். [இ]

## அடையாள அட்டை

கொழும்பு ஏப்ரல் 2

1972 - 1973 ஆம் ஆண்டுகளில் தேசிய அடையாள அட்டை பெற்றவர்கள் தங்கள் அட்டைகளைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்று ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் அறிவித்திருக்கிறார். [இ-எ]

---

# S. L. E. A. S.

(LIMITED)

துரித பயிற்சி வகுப்புகள்

பாடங்கள்

1. நுண்ணறிவு 2 கிரகித்தல்
3. கல்வி நிர்வாகம் பற்றிய நிகழ்வுக் கற்கை

ஆரம்பம்: 06 - 04 - 91 8-30 மணி

முழுக்கட்டணம் 250/-

★ Limited Number in Each Class
★ அச்சடித்த பாடக் குறிப்புகள் இலவசம்
★ மாதிரி வினா விடைகள் இலவசம்

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION

[O L R தேவாலய மேற்குப் பக்கம்]

16, 3rd Cross Street, Jaffna.

[சி-5899

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம்: | | மறைவு: |
|---|---|---|
| 06 | | 04 |
| 01 | | 03 |
| 1956 | | 1991 |



## அமரர் யோகமணி யோகேந்திரன்

[ஆசிரியை, யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்]

திருமதி யோகமணி யோகேந்திரன் 04-03-1991ல் சிவபதமடைந்தார். அன்னாரின் மரணக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் இன்னும் பல்வேறு வழிகளில் உதவிகள் செய்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 03 4-1991 காலை புதன்கிழமை பருத்தித்துறையிலுள்ள அவரது வீட்டில் நடை பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கணவன், பிள்ளைகள், பெற்றோர், சகோதரன், சகோதரிகள், மைத்துனன், மைத்துனி, பெறாமக்கள், மருமக்கள்

திரு. நி. யோகேந்திரன்.
பத்திரகாளி கோவில் வீதி,
பருத்தித்துறை. [16280]

---

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு: | | உதிர்வு: |
|---|---|---|
| 30 | | 05 |
| 04 | | 04 |
| 1968 | | 1988 |



## செல்வன் கிருஷ்ணபிள்ளை ஜெயபாலன்

[கொக்குவில் இந்துக்கல்லூரி உயர்தர மாணவன்]

திதி: 02 - 04 - 1991

நியாயங்களுக்காகப் போராடி
நியாயமேயற்று
மரணித்த
மரணித்துக் கொண்டிருக்கின்ற
அனைத்து ஜீவன்களும்
எம் நினைவலையில்
ஓர் தினம்

— மனிதம் —

குடும்பத்தினர்.

''சசிவனம்''
சுதுமலை தெற்கு, மானிப்பாய். [16277]

---

# கிளை திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப். 2

இராம கிருஷ்ணாலயா நுண்கலைக் கல்லூரியின், கிளை திறப்பு விழா எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு தாவடி வடக்கு கொக்குவிலில் நடைபெற உள்ளது. [இ-த]

---

## உரும்பராயில்

# COMPUTER PROGRAMMING

★ Basic Language
பயிற்சிக் காலம் 02 மாதம்

★ Word Star
(Word Star 2000 +)
Duration 03 Weeks

★ Lotus 1-2-3 (Accountancy Package)
Data Entry
(Including CIMA Stage II Students)
Duration 03 Weeks

★ D Base III +
Duration 04 Weeks

ஆரம்பம்: 06-04-1991

★★ சேர விரும்புவோர் உடன நேரில் வந்து விண்ணப்பிக்கவும்.

ஆர்வமுள்ள அனைவரும் —
இருபாலரும் சேரலாம்

நேரில் வரவும்

## JAFFNA CENTRAL ACADEMY

[நகை மாளிகை அருகாமை]

உரும்பராய் சந்தி, உரும்பராய்.

[16285]

---

# மரண அறிவித்தல்

## க. தர்மானந்தன்

கதிரவேலு தர்மானந்தன் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு திருமதி N. கதிரவேலு ஆகியோரின் மகனும், காலஞ்சென்ற திரு திருமதி S. S. பெரியதம்பி அவர்களின் மருமகனும், செல்வமலரின் அன்புக் கணவரும், நரேந்திரா, மகேந்திரா, ரவீந்திரா ஆகியோரின் அருமைத் தந்தையும், சுசி, எரிக்கா, ஷிராணி ஆகியோரின் மாமனும், விலாந்தி, டேவிட் என்போரின் பாட்டனும், காலஞ்சென்ற பாலரெட்ணராஜா, காலஞ்சென்ற ரெட்ணானந்தன், காலஞ்சென்ற கமலானந்தன், திருமதி திலகா கதிர்காமர், திருமதி வரதா குணரத்தினம், திருமதி பத்மா பிரெக்கன்றிட்ஜ், திருமதி இராஜேஸ் பேரின்பநாயகம், திருமதி சகுந்தலா சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி செல்லம் பாலரட்ணராஜா, திரு C. S. குணரெட்ணம் ஆகியோரின் மைத்துனருமாவர்.

அன்னாரின் அடக்க ஆராதனை அவரது இல்லத்தில் ஏப்ரல் 3 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் துண்டி மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:

22, றக்கா ஒழுங்கை,
சுண்டிக்குளி
J. ராஜக்கோன்

[16281]

---

## சீனிவாசகம் சின்னத்தம்பி

[இளைப்பாறிய பிரதம கணக்காளர்-
Co-op Developement Dept.]

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட சீ. சின்னத்தம்பி காலமானார்.

இவர் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவயோகசுந்தரி [சிவமணி], சிவமோகினி [U. K] சிவமனோகரி [U. K.] ஆகியோரின் அருமைத்தந்தையும், காலஞ்சென்ற கணேசமூர்த்தி [சட்டத்தரணி], அருளானந்தம் [U. K ], ஆனந்தக்குமாரசாமி [U. K.], ஆகியோரின் மாமனாரும், சுந்தரேசன், காயத்ரி, அனோஜன் ஆகியோரின் பேரனாரும்,

காலஞ்சென்றவர்களான முத்துப்பிள்ளை, அன்னம்மா, இராசம்மா, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நாகலிங்கம், காலஞ்சென்ற நடராசா, பதமநாதன், ருக்மணி, காலஞ்சென்ற மகாதேவன், திருமதி கமலேஸ்வரி-சேனாதிராஜா, கணேசபிள்ளை, திருமதி கனகசுந்தரி-ஞானசுந்தரம், சண்முகநாதன், காலஞ்சென்ற சண்முகரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 02-04-91 செவ்வாய்க்கிழமை இன்று காலை 10 00 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

நந்தாவில்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
K. சண்முகநாதன்.

[16282]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுச் சூழல் அபிவிருத்திப் போட்டி

### சிறுபோகம் - 1991 கிளிநொச்சி மாவட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கமாகவும், எமது மாவட்டத்தில் வாழும் மக்களின் வீட்டுச் சூழலின் அபிவிருத்தியை, பராமரிப்பை, ஊக்குவிக்கவும் எம்மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதோடு போஷாக்கு உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டும் மேற்படி போட்டியை எமது மாவட்டத்தில் நடத்தி பெறுமதி வாய்ந்த பரிசில்களை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் எவரும் பங்குபற்றலாம். நிபந்தனைகள் வருமாறு.

அ. விண்ணப்பம்

முடிவுத் திகதி: 20 - 04 - 1991 சனிக்கிழமை.
அனுப்ப வேண்டிய முகவரி:
செயலாளர், பகுதி உற்பத்திக் குழு

குறிப்பு:-

விண்ணப்பப்படிவம் ஏதுமில்லை. விண்ணப்பதாரிகள் சாதாரண தாளில் விண்ணப்பத்தை அனுப்பி வைக்கலாம். போட்டி நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுவதாகவும், போட்டியை ஒழுங்கு செய்வோர் எடுக்கும் முடிவுகளை ஏற்றுக் கொள்வதாகவும் விண்ணப்பத்தில் பிரகடனம் செய்ய வேண்டும். போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் பின்வரும் அம்சங்களை தனது வீட்டுச் சூழலில் ஏற்படுத்தி மதிப்பீட்டிற்கு இடம் கொடுக்க வேண்டும்.

1. பயிர்கள்

பருப்புவகை:

குறைந்தது ஒரு பரப்பில் பாசிப்பயறு செய்கை பண்ணுவது விரும்பத்தக்கது.

மரக்கறி வகை:

ஒரு இலை மரக்கறி உட்பட ஏதேனும் நான்கு உள்ளூர் மரக்கறிப் பயிர்கள். ஒரு பயிரின் குறைந்த பரப்பளவு 15' X 10'.

கிழங்கு வகை:

மரவள்ளி / வற்றாளை - குறைந்தது 30 சதுர அடி

பழமரம்:

பப்பாசி 3 — 5 மரங்கள்
வாழை 2 — 3 நிலையங்கள்

பிற பயனுள்ள மரங்கள்:

எலுமிச்சை — குறைந்தது 1
முருங்கை — குறைந்தது 1
அகத்தி — குறைந்தது 1
இப்பில் இப்பில் — குறைந்தது 3

தளபாடங்களுக்குரிய மரம்:

வேப்பு, தேக்கு வேலியோரமாக

வேறு பொருளாதார முக்கியத்துவமான மரங்கள்:

தென்னை — குறைந்தது 03
பனை [வேலியில்] குறைந்தது — 05
கமுகு — 3

2. கூட்டெரு தயாரிப்பு:

குவியல் / குழி — 15' X 8' [குறைந்தது ஒன்று]

3. மாடு/ஆடு/கோழி வளர்ப்பு:

குடும்ப அங்கத்தவர்களுடைய தேவையையேனும் பூர்த்தி செய்யக் கூடிய முயற்சியாக இருக்க வேண்டும்.

குறிப்பு:
பொருத்தமான உறைவிடம் இருத்தல் அவசியம்.

ஆ போட்டிகள் பின்வரும் மட்டங்களில் மத்தியஸ்தம் செய்யப்படும்.

| | மட்டம் | முடிவுத்திகதி |
|---|---|---|
| 1. | உற்பத்திக்குழு மட்டம் | 15-05-1991 |
| 2. | பெரும்பாகக் குழு மட்டம் | 20-05-1991 |
| 3. | உப மாவட்டக் குழு மட்டம் | 30-05-1991 |
| 4. | மாவட்டக் குழு மட்டம் | 10-06-1991 |

இ. பரிசில்கள்:

குறிப்பு:

1. பணமாக/பொருள்களாக வழங்கப்படும்:
2. பின்வரும் தொகைகளுக்குக் குறையாத பெறுமதியுள்ள பரிசில்கள் வழங்கப்படும்.

| | மட்டம் | பெறுமதி 1-ம் இடம் ரூபா | 2-ம் இடம் ரூபா | 3-ம் இடம் ரூபா |
|---|---|---|---|---|
| 1. | பெரும்பாகம் | 2,000 | 1,500 | 1,000 |
| 2. | உபமாவட்டம் | 3,000 | 2,000 | 1,500 |
| 3. | மாவட்டம் | 5,000 | 3,000 | 2,000 |

எமது இம்முயற்சியில் பெருமளவில் பங்கு கொண்டு எமது மாவட்ட வளர்ச்சிக்கு உதவுமாறு எமது மாவட்ட மக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கா. மாணிக்கவாசகர்,
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

செயலகம்,
கிளிநொச்சி,
21 - 03 - 1991

[சி-5498]

# யுத்த சூழ்நிலை ஒழிய வேண்டி கொழும்பில் சமாதானப் பிரார்த்தனை

## அதிமேற்றிராணியார் கோமஸ் செய்தி

கொழும்பு, ஏப். 2

யுத்த சூழ்நிலையை ஒழித்து சமாதானம் ஏற்படுவதையே இலங்கை மக்கள் இன்று விரும்புகிறார்கள்.

இன்றைய நிலைமையினால் எமக்கு பயன்கிடைக்கப்போவதில்லை.

உலக ஆயுத விற்பனையாளர்களே இதனால் நன்மை அடைவார்கள்.

இம்மாதம் 12 ஆம் திகதி நடைபெறும் சமாதானப் பிரார்த்தனை தொடர்பாக கொழும்பு அதிமேற்றிராணியார் அதி வண. ஒஸ்வால்ட் கோமஸ் விடுத்த செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீண்டகால போராட்டத்தினால் எமது பொருளாதாரவளம், மனித, ஆத்மீக பண்புகள் பாதிக்கப்பட்டுள்ளன.

பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுகாண பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும் அவை பயனளிக்கத் தவறி உள்ளன.

இரண்டு உலக மகாயுத்தங்கள் விரைவில் தீர்த்து வைக்கப்பட்டன.

வளைகுடா யுத்தமும் குறுகிய காலத்தில் முடிவடைந்தது.

ஆனால் இலங்கையில் யுத்த நிலை இன்னும் நீடித்துக் கொண்டே போகிறது.

இந்த நிலைக்கு யார் பொறுப்பு என ஆராய்வதனால் எதுவித பயனும் கிடைக்கப்போவதில்லை.

யுத்த நிலை என்பது மறுக்க முடியாதது. இடம்பெறும் நிகழ்ச்சிகளை வரலாறு என்று கருத வேண்டும்.

நாம் அனைவரும் எதிர்பார்ப்பது தகராறுக்கு சமாதானத் தீர்வு காண்பதே ஆகும். அப்போது தான் சகல பிரிவினரும் சமாதானத்துடனும், கௌரவத்துடனும் வாழ முடியும்.

சமாதானத்தை நாட்டில் மீண்டும் ஏற்படுத்த முடியும் என்பது எனது திடமான நம்பிக்கை ஆகும்.

இப்படி அதி மேற்றிராணியார் தனது செய்தியில் கூறினார்.

[இ-எ]

## புங்குடுதீவில் முத்தமிழ் விழா

புங்குடுதீவு, ஏப். 2

எதிர்வரும் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் புங்குடுதீவுப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை, கலாசாரப் பிரிவினால் நடத்தப்படவிருக்கும் முத்தமிழ் விழா சம்பந்தமான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

தொடர்ந்து இரண்டு தினங்கள் நடைபெறவிருக்கும் முத்தமிழ் விழாவை சிறப்புற நடத்துவதற்காக புங்குடுதீவு மூற்றவெளி மைதானத்தில் புதிய அரங்கு ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

[இ-131]

## கன்சர்வேட்டில் தொழிற்கட்சி சம நிலையில்

லண்டன், ஏப். 2

பிரிட்டனில் வார இறுதியில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றில் ஆளும் கன்சர்வேட்டிங் கட்சியும், தொழிற் கட்சியும் சமமான செல்வாக்குப் பெற்றிருக்கின்றன எனத் தெரிய வந்திருக்கிறது.

தலா 40 சதவீதமான ஆதரவை இரு கட்சிகளும் பெற்றுள்ளன.

சமூக-ஜனநாயகக் கட்சிக்கு 16 சதவீத ஆதரவு வாக்காளர் மத்தியில் இருக்கிறது.

[இ-எ]

## ஈஸ்டர் பண்டிகையின் அர்த்தம் தெரியாதவர்கள்

லண்டன், ஏப். 2

ஈஸ்டர் பண்டிகையின் அர்த்தம் பிரிட்டனில் வாழும் மக்களில் மூன்றில் ஒரு பங்கினருக்கு தெரியாதிருப்பதாக லண்டன் சண்டே எக்ஸ்பிரஸ் பத்திரிகை நடத்திய கருத்துக்கணிப்பில் தெரிய வந்துள்ளது.

34 சத வீதமானோருக்கு ஈஸ்டர் பண்டிகை ஏன் கொண்டாடப்படுகிறது என்பது தெரிந்திருக்கவில்லை.

40 சத வீதமானோருக்கு பெரிய வெள்ளிக்கிழமையின் முக்கியத்துவம் தெரிந்திருக்கவில்லை.

ஆனால் கருத்துக் கணிப்பில் விசாரிக்கப்பட்டவர்களில் 85 சதவீதமானோர் ... தெரிந்தவர்கள் என்று தெரிவித்தனர்.

[இ-எ]

## ஓராண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத் திவசமும்



மண்ணில் மலர்வு:
16 - 10 - 1970

விண்ணில் உயர்வு:
14 - 03 - 1990

திதி:
02 — 04 — 1991

இலட்சிய தீபம் ஜெயா
### செல்வி ஜெயந்தி திருஞானம்

பல்கலைக்கழக படியேறுவதில் பழுது வந்த தென்று
பாவையே நீ பரமனடி சேர்ந்து விட்டாய்
ஆறாது தீராது அழுதாலும் மாறாது
ஆண்டுகளானாலும் உன் அன்பு வற்றாது
பிறப்பு உனக்கு உள்ளதெனில் - மீண்டும்
வந்துவிடு எங்களிடம் வரவேற்கக் காத்திருப்போம்

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அக்காமார்,
தம்பிமார், மைத்துனர்,
அருணோதயாக் கல்லூரி ஆசிரியர்கள்.

'திருவகம்'
அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

[16267]

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
29 — 02 — 1952



இறப்பு:
02 — 04 — 1990

### வைரமுத்து தவராசா

எங்கள் அன்புத்தெய்வமே! ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலாது. தங்கள் பிரிவால் வாடும் அன்பு மனைவி, பிள்ளைகள், அப்பா, அம்மா, சகோதரர்கள், மாமிமார், மச்சான்மார்கள், மச்சாள்மார்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்

தகவல்:
த. புவனராணி (மனைவி)

செல்வபுரம்,
நாவற்குழி, யாழ்ப்பாணம்.

[3900]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை

எழுதுவினைஞர் பதவிகளுக்குத் தகுதியானோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித் தகுதி: ஜி. சி. ஈ. உயர்தரம்.

விண்ணப்பங்களைச் சொந்தக் கையெழுத்தில், 8'' × 11'' அளவுடைய காகிதத்தில் எழுதி அனுப்ப வேண்டும்.

எந்த வகையிலேனும் செல்வாக்கைப் பயன்படுத்திப் பதவியைப் பெற முயற்சிப்பது தகுதியீனமாகக் கருதப்படும்.

இந்த அறிவித்தல் வெளியான ஏழு தினங்களுக்குள் கிடைக்கக்கூடியதாக, மேலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''எழுதுவினைஞருக்கான விண்ணப்பம்'' என்று எழுதி கீழ்வரும் விலாசத்திற்கு விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

முகாமையாளர்,
ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்,
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[C/ 5893]

# 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



## பாலச்சந்திரன்
(ஞா. லக்ஷ்மீகரன்)

தாயின் மடியில்: 14 - 12 - 1967
ஈழத் தாயின் மடியில்: 02 - 04 - 1987

உனைப் பிரிந்து நாலாண்டுகள் சென்றனவோ
பாலச்சந்திரா!
எமக்கு நாலு நாட்கள் என்றது போல்
எங்கள் அருமை பாலச்சந்திரா!
ஆகாயம் சுருங்கினாலும் சுருங்கலாம் பாலச்சந்திரா!
ஆனாலும் உனை ஈன்ற தாய்ப்பாசம் சுருங்குமோ
பாலச்சந்திரா!
ஆலமரமாய் நின்ற அப்பா மனதில் நீ பாலச்சந்திரா!
அண்ணன் வழி சென்று மண் மீட்கப் போகின்றேன்
என்றாயே பாலச்சந்திரா!
உன் எதிரில் வந்து நிற்க முடியாத சிங்களவன்
பாலச்சந்திரா!
ஊர்தி வானில் நின்று உன் நெஞ்சில் குண்டு மழை
பொழிந்தானே பாலச்சந்திரா!
கரையிலே புலி நீ கடலிலே புலி நான் என்ற
அண்ணன் பாலச்சந்திரா!
உனது உடல் காணாது நின்று கலங்குகிறானே
பாலச்சந்திரா!
ஆசை அக்கா ஆசை அத்தான் உங்கள் பாலச்சந்திரா!
அவர்களின் ஆறாத்துயர் மாறுமோ பாலச்சந்திரா!
சின்ன அண்ணா இன்ன அண்ணா என்றோ
உன் தங்கைமார் பாலச்சந்திரா!
உன் உருவப் படம் முன் உருகி அழுகிறார்களே
பாலச்சந்திரா!
அன்பின் அரவணைப்பில் நின்ற உன் தம்பி
பாலச்சந்திரா!
அண்ணன் பிரிவுத் துயர் தாங்காது நிற்கிறானே
பாலச்சந்திரா!
எங்கள் எல்லோர் நெஞ்சமும் உனை மறந்து வாழாது
பாலச்சந்திரா!

உன் பிரிவால் வாடும்!
அப்பா, அம்மா, அண்ணன்,
தம்பி, அக்கா, அத்தான், தங்கைமார்,
மற்றும் அன்ரி ஐயா, பிள்ளைகள்.

செ. ஞானசேகரம்,
வெற்றிலைக் கேணி,
இயக்கச்சி.

இந்த மண்மீட்பு போரில் இவருடன் மரணித்த மற்ற வீரர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலி.

[4001]

## ஓய்வூதிய கொடுப்பனவு

பருத்தித்துறை, ஏப். 2

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் இன்று 2 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவாக ரூபா 1,500 வழங்கப்படவுள்ளது.

தினமும் முதல் வரும் நூறு ஓய்வூதியகாரர்களுக்கு இக் கொடுப்பனவு வழங்கப்படும் என வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. [இ-118]

## சுவாமி சாந்தானந்தா ஜெயந்தி விழா

சுவாமி சாந்தானந்தாவின் ஜெயந்தி தின விழாவும், இராமகிருஷ்ணாலயா நுண்கலைக் கல்லூரியின் 3 ஆம் ஆண்டு நிறைவு விழாவும், எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் உள்ள இராமகிருஷ்ணாலயத்தில் நடைபெறும்.

பூஜை, ஆராதனைகள் காலை 4-30க்கு ஆரம்பமாகும். பிற்பகல் 3-00 மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்ச்சிகளில் கலை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

[இ-த]

## குவைத்துக்கு அமைச்சர் குழு

கொழும்பு, ஏப். 2

இலங்கையருக்கு தொழில் வாய்ப்புத் தேடி குவைத்துக்கு அமைச்சர்குழு ஒன்று அடுத்த வாரம் செல்லவிருக்கிறது.

வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹெரத், வர்த்தக, வாணிப அமைச்சர் ஏ. ஆர். எம். மன்சூர், தொழில் அமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திரா ஆகியோர் அந்தக் குழுவில் இடம்பெறுகின்றனர். [இ-எ]

## செயற்கைமுறை சினைப்படுத்தல்

தென்மராட்சிப் பகுதியில் செயற்கை முறையில் கால்நடைகளைச் சினைப்படுத்தும் வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

[இ-117]

## வைத்தியசாலையில் மீண்டும் உணவு

தாளையடி, ஏப். 2

மருதங்கேணி அரசினர் வைத்தியசாலை நோயாளர்களுக்கு மீண்டும் உணவு வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த வைத்தியசாலையில் கடந்த மூன்று மாதங்களாக நோயாளர்களுக்கு உணவு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. [இ-144]

## சங்கக்கடையில் பொருள்கள் களவு

மானிப்பாய், ஏப். 2

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 16 ஆவது கிளை உடைக்கப்பட்டு பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

இக் கிளையில் சில நாட்களின் முன்பும் பொருள்கள் களவாடப்பட்டது குறிப்பிடத்தக்கது. [இ-90]

## மனித முன்னேற்ற நடு நிலையம் உதவி

குருநகர், ஏப். 2

மத்திய கிழக்கில் இருந்து நாடு திரும்பியுள்ள பாதிக்கப்பட்ட 49 குடும்பங்களுக்கு மனித முன்னேற்ற நடுநிலையம் நிவாரணம் வழங்கி வருகிறது.

மூன்று மாதங்களுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் 500 ரூபாவும் கல்வி கற்கும் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் கல்விச் செலவாக 1,200 ரூபாவும் நிலையத்தால் நிவாரண உதவியாக வழங்கப்படுகின்றது என்று இயக்குநர் [illegible] தெரிவித்தார்.

[இ-51]

# 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி மார்க்கண்டு அமிர்தம்

[புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், தேவிபுரம் உடையார் கட்டை வசிப்பிடமாகவும் கொண்டவர்]

தோற்றம்:- 5 - 4 - 1928
மறைவு:- 2 4 - 1987

தாயே! சரஸ்வதியே! எங்களை விட்டுப் பிரிந்தும் உங்கள் நினைவு எங்களை விட்டு அகலாது அம்மா.

உங்களை நினைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கும்:

பிள்ளைகள்:-
நாகேந்திரன், மகாலிங்கம், காந்திமதி.
மருமக்கள்:-
தியாகராஜா, காஞ்சனாமாலை,

உடையார் கட்டு,
தேவிபுரம்.

[16269]

# 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 15 - 12 - 1924

மறைவு: 03 - 03 - 1991

அமரர்

## றோமாம்பிள்ளை செபமாலையம்மா

எங்கள் அன்புத் தெய்வமே! அம்மா எம்மையெல்லாம் அன்புடனும், பாசத்துடனும், பண்புடனும் வாழ வைத்த தெய்வமே! உங்கள் அன்பு தவழும் இனிய முகம் எம் கண்களில் தெரிகின்றதே அம்மா! அம்மா நீங்கள் எங்களையெல்லாம் விட்டுப் பிரிந்து 31 நாட்கள் சென்றாலும் இன்றும் எம் கண் முன்னே நடமாடும் தெய்வமாக காட்சி தருகின்றீர்கள் அம்மா! எங்கள் இதயத்தில் உங்கள் நினைவுகள் என்றும் பசுமையாக நீங்காது நிலைத்திருக்கும்.

உங்கள் ஆன்மா சாந்தியடைய என்றும் இறைவனை வேண்டுகின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.

குடத்தனை வடக்கு,
குடத்தனை.

[16225]

# 31 ஆம் நாள் வீட்டுக்கிரியை அழைப்பிதழ்



தோற்றம்: 26 - 03 - 1923

மறைவு: 04 03 - 1991

சாவகச்சேரி கச்சாய் வீதி
கோவில்குடியிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட
அமரர்

## நாகரெத்தினம் செல்லப்பா

அன்னாரின் வீட்டுக் கிரியைகள் 03 - 04 - 91 புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளில் எம்முடன் கலந்து பங்குபற்றுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''ஜெயவாசா''
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

[16273]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுச் சூழல் அபிவிருத்திப் போட்டி

## சிறுபோகம் - 1991 கிளிநொச்சி மாவட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கமாகவும், எமது மாவட்டத்தில் வாழும் மக்களின் வீட்டுச் சூழலின் அபிவிருத்தியை, பராமரிப்பை, ஊக்குவிக்கவும் எம்மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதோடு போஷாக்கு உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டும் மேற்படி போட்டியை எமது மாவட்டத்தில் நடத்தி பெறுமதி வாய்ந்த பரிசில்களை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது:

இப்போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் எவரும் பங்குபற்றலாம். நிபந்தனைகள் வருமாறு.

அ. விண்ணப்பம்

முடிவுத் திகதி: 20 - 04 - 1991 சனிக்கிழமை.

அனுப்ப வேண்டிய முகவரி:

செயலாளர், பகுதி உற்பத்திக் குழு

குறிப்பு:-

விண்ணப்பப்படிவம் ஏதுமில்லை. விண்ணப்பதாரிகள் சாதாரண தாளில் விண்ணப்பத்தை அனுப்பி வைக்கலாம். போட்டி நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுவதாகவும், போட்டியை ஒழுங்கு செய்வோர் எடுக்கும் முடிவுகளை ஏற்றுக் கொள்வதாகவும் விண்ணப்பத்தில் பிரகடனம் செய்ய வேண்டும். போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் பின்வரும் அம்சங்களை தனது வீட்டுச் சூழலில் ஏற்படுத்தி மதிப்பீட்டிற்கு இடம் கொடுக்க வேண்டும்.

1. பயிர்கள்

பருப்புவகை:

குறைந்தது ஒரு பரப்பில் பாசிப்பயறு செய்கை பண்ணுவது விரும்பத்தக்கது.

மரக்கறி வகை:

ஒரு இலை மரக்கறி உட்பட ஏதேனும் நான்கு உள்ளூர் மரக்கறிப் பயிர்கள். ஒரு பயிரின் குறைந்த பரப்பளவு 15' X 10'.

கிழங்கு வகை:

மரவள்ளி / வற்றாளை - குறைந்தது 30 சதுர அடி

பழமரம்:

பப்பாசி 3 — 5 மரங்கள்
வாழை 2 — 3 நிலையங்கள்

பிற பயனுள்ள மரங்கள்:

எலுமிச்சை — குறைந்தது 1
முருங்கை — குறைந்தது 1
அகத்தி — குறைந்தது 1
இப்பில் இப்பில் — குறைந்தது 3

தளபாடங்களுக்குரிய மரம்:

வேம்பு, தேக்கு வேலியோரமாக

வேறு பொருளாதார முக்கியத்துவமான மரங்கள்:

தென்னை — குறைந்தது 03
பனை [வேலியில்] குறைந்தது — 05
கமுகு — 3

2. கூட்டெரு தயாரிப்பு:

குவியல் / குழி — 15' X 8' [குறைந்தது ஒன்று]

3. மாடு/ஆடு/கோழி வளர்ப்பு:

குடும்ப அங்கத்தவர்களுடைய தேவையையேனும் பூர்த்தி செய்யக் கூடிய முயற்சியாக இருக்க வேண்டும்.

குறிப்பு:

பொருத்தமான உறைவிடம் இருத்தல் அவசியம்;

ஆ போட்டிகள் பின்வரும் மட்டங்களில் மத்தியஸ்தம் செய்யப்படும்.

| | மட்டம் | முடிவுத்திகதி |
|---|---|---|
| 1. | உற்பத்திக்குழு மட்டம் | 15-05-1991 |
| 2. | பெரும்பாகக் குழு மட்டம் | 20-05-1991 |
| 3. | உப மாவட்டக் குழு மட்டம் | 30-05-1991 |
| 4. | மாவட்டக் குழு மட்டம் | 10-06-1991 |

இ. பரிசில்கள்:

குறிப்பு:

1. பணமாக/பொருள்களாக வழங்கப்படும்;
2. பின்வரும் தொகைகளுக்குக் குறையாத பெறுமதியுள்ள பரிசில்கள் வழங்கப்படும்.

| | மட்டம் | பெறுமதி 1-ம் இடம் ரூபா | 2-ம் இடம் ரூபா | 3-ம் இடம் ரூபா |
|---|---|---|---|---|
| 1. | பெரும்பாகம் | 2,000 | 1,500 | 1,000 |
| 2. | உபமாவட்டம் | 3,000 | 2,000 | 1,500 |
| 3. | மாவட்டம் | 5,000 | 3,000 | 2,000 |

எமது இம்முயற்சியில் பெருமளவில் பங்கு கொண்டு எமது மாவட்ட வளர்ச்சிக்கு உதவுமாறு எமது மாவட்ட மக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கா. மாணிக்கவாசகர்,
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

செயலகம்,
கிளிநொச்சி,
21 - 03 - 1991

[சி-5498]

# யுத்த சூழ்நிலை ஒழிய வேண்டி கொழும்பில் சமாதானப் பிரார்த்தனை

## அதிமேற்றிராணியார் கோமஸ் செய்தி

கொழும்பு, ஏப். 2

யுத்த சூழ்நிலையை ஒழித்து சமாதானம் ஏற்படுவதையே இலங்கை மக்கள் இன்று விரும்புகிறார்கள்.

இன்றைய நிலைமையினால் எமக்கு பயன்கிடைக்கப்போவதில்லை.

உலக ஆயுத விற்பனையாளர்களே இதனால் நன்மை அடைவார்கள்.

இம்மாதம் 12 ஆம் திகதி நடைபெறும் சமாதானப் பிரார்த்தனை தொடர்பாக கொழும்பு அதிமேற்றிராணியார் அதி வண. ஒஸ்வால்ட் கோமஸ் விடுத்த செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீண்டகால போராட்டத்தினால் எமது பொருளாதாரவளம், மனித, ஆத்மீக பண்புகள் பாதிக்கப்பட்டுள்ளன.

பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுகாண பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும் அவை பயனளிக்கத் தவறி உள்ளன.

இரண்டு உலக மகாயுத்தங்கள் விரைவில் தீர்த்து வைக்கப்பட்டன.

வளைகுடா யுத்தமும் குறுகிய காலத்தில் முடிவடைந்தது.

ஆனால் இலங்கையில் யுத்த நிலை இன்னும் நீடித்துக் கொண்டே போகிறது.

இந்த நிலைக்கு யார் பொறுப்பு என ஆராய்வதனால் எதுவித பயனும் கிடைக்கப்போவதில்லை.

யுத்த நிலை என்பது மறுக்க முடியாதது. இடம்பெறும் நிகழ்ச்சிகளை வரலாறு என்று கருத வேண்டும்.

நாம் அனைவரும் எதிர்பார்ப்பது தகராறுக்கு சமாதானத் தீர்வு காண்பதே ஆகும். அப்போது தான் சகல பிரிவினரும் சமாதானத்துடனும், கௌரவத்துடனும் வாழ முடியும்.

சமாதானத்தை நாட்டில் மீண்டும் ஏற்படுத்த முடியும் என்பது எனது திடமான நம்பிக்கை ஆகும்.

இப்படி அதி மேற்றிராணியார் தனது செய்தியில் கூறினார்.

[இ-எ]

## புங்குடுதீவில் முத்தமிழ் விழா

புங்குடுதீவு, ஏப். 2

எதிர்வரும் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் புங்குடுதீவுப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை, கலாசாரப் பிரிவினால் நடத்தப்படவிருக்கும் முத்தமிழ் விழா சம்பந்தமான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

தொடர்ந்து இரண்டு தினங்கள் நடைபெறவிருக்கும் முத்தமிழ் விழாவை சிறப்புற நடத்துவதற்காக புங்குடுதீவு முற்றவெளி மைதானத்தில் புதிய அரங்கு ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

[இ-131]

## கன்சர்வேட்டில் தொழிற்கட்சி சம நிலையில்

லண்டன், ஏப். 2

பிரிட்டனில் வார இறுதியில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றில் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியும், தொழிற் கட்சியும் சமமான செல்வாக்குப் பெற்றிருக்கின்றன எனத் தெரிய வந்திருக்கிறது.

தலா 40 சதவீதமான ஆதரவை இரு கட்சிகளும் பெற்றுள்ளன.

சமூக- ஜனநாயகக் கட்சிக்கு 16 சதவீத ஆதரவு வாக்காளர் மத்தியில் இருக்கிறது.

[இ-எ]

## ஈஸ்டர் பண்டிகையின் அர்த்தம் தெரியாதவர்கள்

லண்டன், ஏப். 2

ஈஸ்டர் பண்டிகையின் அர்த்தம் பிரிட்டனில் வாழும் மக்களில் மூன்றில் ஒரு பங்கினருக்கு தெரியாதிருப்பதாக லண்டன் சண்டே எக்ஸ்பிரஸ் பத்திரிகை நடத்திய கருத்துக்கணிப்பில் தெரிய வந்துள்ளது.

34 சதவீதமானோருக்கு ஈஸ்டர் பண்டிகை ஏன் கொண்டாடப்படுகிறது என்பது தெரிந்திருக்கவில்லை.

40 சதவீதமானோருக்கு பெரிய வெள்ளிக்கிழமையின் முக்கியத்துவம் தெரிந்திருக்கவில்லை.

ஆனால் கருத்துக் கணிப்பில் விசாரிக்கப்பட்டவர்களில் 85 சதவீதமானோர் [illegible] வித்தனர்.

[இ-எ]

## ஓராண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத் திவசமும்



மண்ணில் மலர்வு:
16 - 10 - 1970

விண்ணில் உயர்வு:
14 - 03 - 1990

திதி:
02 — 04 — 1991

இலட்சிய தீபம் ஜெயா

### செல்வி ஜெயந்தி திருஞானம்

பல்கலைக்கழக படியேறுவதில் பழுது வந்ததென்று
பாவையே நீ பரமனடி சேர்ந்து விட்டாய்
ஆறாது தீராது அழுதாலும் மாறாது
ஆண்டுகளானாலும் உன் அன்பு வற்றாது
பிறப்பு உனக்கு உள்ளதெனில் - மீண்டும்
வந்துவிடு எங்களிடம் வரவேற்கக் காத்திருப்போம்

உன் பிரிவால் துயருறும்

அப்பா, அம்மா, அக்காமார்,
தம்பிமார், மைத்துனர்,
அருணோதயாக் கல்லூரி ஆசிரியர்கள்.

'திருவகம்'
அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

[16267]

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
29 — 02 — 19[illegible]52



இறப்பு:
02 — 04 — 1990

### வைரமுத்து தவராசா

எங்கள் அன்புத்தெய்வமே! ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலாது. தங்கள் பிரிவால் வாடும் அன்பு மனைவி, பிள்ளைகள், அப்பா, அம்மா, சகோதரர்கள், மாமிமார்கள், மச்சான்மார்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்

தகவல்:
த. புவனராணி (மனைவி)

செல்வபுரம்,
நாவற்குழி, யாழ்ப்பாணம்.

[3900]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிந்திய செய்தி

## காரைநகரில் மோதல்

காரைநகர் சீ-நோர் பகுதியில் நேற்றிரவு 8-30 மணி முதல் தொடர்ந்து மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்ததாக நள்ளிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

ஏற்பட்ட சேதங்கள் குறித்தும் மோதல் நிலைமை குறித்தும் மேலதிக விவரங்கள் இச் செய்தி அச்சுக்குப் போகும் வரைக் கிடைக்கவில்லை.

இதேசமயம்—

நேற்று நள்ளிரவு வேளை பொம்மர் ஒன்றும் ஹெலிக்கொப்டர் ஒன்றும் யாழ் நகரப் பகுதிக்கு மேலாக பறந்து சென்றன. [உ-3]

## ஆனையிறவில் ஷெல் வீச்சு

தென்மராட்சி, ஏப் 2

கடந்த மூன்று நாட்களாக ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து அடிக்கடி ஷெல்கள் ஏவப்படுகின்றன.

முகாமிலிருந்து நாலா பக்கங்களுக்கும் ஷெல்கள் ஏவப்பட்டன.

அனேகமான ஆட்லறி ஷெல்கள் மாசார், புதுக்காட்டுச் சந்தி ஆகிய பகுதிகளிலேயே விழுந்து வெடித்தன. அவற்றில் பெரும்பாலானவை தென்னந்தோட்டங்களில் வீழ்ந்தன.

பொதுமக்கள் எவருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை எனினும் பல தென்னை மரங்கள் முறிந்து விழுந்தும், காயமுற்றும் பாதிக்கப்பட்டன. [உ-117]

## வேப்பங்குளம் தாக்குதலில் களப்பலியான பன்னிருவர்

யாழ்ப்பாணம், ஏப். 2

மன்னார் வேப்பங்குளத்தில் கடந்த சனியன்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின் போது களப்பலியான 12 வேங்கைகளின் பெயர் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன அவை வருமாறு;-

★ லெப்டினன்ட் ஜான் [செபமாலை ஸ்டான்லி பெர்ணான்டோ - சிலாவத்தை, முல்லைத்தீவு.

★ லெப்டினன்ட் அருண் [சுப்பையா நித்தியானந்தேஸ்வரன் - திருவையாறு, கிளிநொச்சி].

★ லெப்டினன்ட் ஜேசு [செபஸ்தியான் ஜோசப் அன்ரனி - முரசுமோட்டை, கிளிநொச்சி].

★ புனிதன் [தி. விஜயன் - வவுனியா].

★ குஞ்சன் [க சமரேஸ் - சிலவத்தை, முல்லைத்தீவு].

★ நிதி [வே பரமேஸ்வரன் கற்சிலைமடு, முல்லைத்தீவு].

★ பைமன் [மிகெயல் திவ்வியநாதன் - மன்னார்].

★ போஸ்கோ [சந்திரன் பத்மநாதன் - முருங்கன்]

★ ரவி [சுப்பிரமணியம் ஜெயநேசன் - முள்ளியவளை].

★ துஷான் [ஸ்தோர் மோகனதாஸ் - புதுக்குடியிருப்பு].

★ சண்ணன் [மாசிலாமணி இராஜேஸ்வரன் - கொக்குத்தொடுவாய்].

★ பைரவி [நாகேந்திரன் சதீஸ்குமார் - நெடுந்தீவு].

## செஞ். அதிகாரி...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வும்—செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன

''ஆனால் சடலங்களின் எண்ணிக்கை அதிகம். அவற்றைப் பொறுப்பேற்று ஒப்படைப்பது சிரமமான காரியம். போதிய முன்னேற்பாடுகள் செய்யப்பட வேண்டி உள்ளன'' — என்று அவ்வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

பருத்தித்துறையில் தற்சமயம் தரித்து நிற்கும் 'குமண' கப்பலில் இச் சடலங்கள் ஏற்றப்பட்டு, பின்னர் அக் கப்பல் மூலம் ஆழ்கடல் பகுதியில் வைத்து ஸ்ரீலங்கா கடற்படைக் கடலுக்கு அவை மாற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [உ-3]

## அரச படைகள் வசமாம்

பக்தாத் ஏப். 2

ஈராக்கின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் இடம்பெற்று வந்த கிளர்ச்சிகளை அரசுப் படைகள் வெற்றிகரமாக அடக்கி வருவதாக பி. பி. சி நேற்று அறிவித்தது.

இதே வேளை—

தமது கட்டுப்பாட்டில் இருந்த பல பகுதிகள் அரசுப் படைகளினால் மீண்டும் கைப்பற்றப்பட்டு விட்டன என்று குர்டிஷ் போராளிகள் நேற்று ஒப்புக் கொண்டனர். [அ-எ]

## கை, கால்களை சங்கிலியால்.....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கிறார்கள்.

★ கம்பங்களுடன் கட்டி வைத்து விட்டு அகப்படும் இரும்புக் கம்பிகளாலும், பொல்லுகளாலும் தாக்குகின்றார்கள்.

இந்தக் கொடூரங்களை அனுபவித்தவர்களே இத் தகவல்களை உதயனுக்குத் தெரிவித்தனர்.

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த அறுவர் கடந்த மாதம் தமிழகத்துக்குப் படகு ஒன்றில் அகதிகளாகப் புறப்பட்டனர் 10-3-91இல் அவர்களை மணற்காடு கடலில் வைத்து ஸ்ரீலங்கா கடற்படையினர் கைது செய்தனர்.

அவர்கள் அறுவரும் காங்கேசன் படை முகாமுக்குக் கூட்டிச் செல்லப் பட்டனர். அங்கு மேற்சொன்ன இம்சைகளுக்கு ஆளாக்கப்பட்டனர்.

அவர்கள் சென்ற படகு பறிமுதல் செய்யப்பட்டது. அவர்கள் எடுத்துச் சென்ற எண்பதினாயிரம் ரூபா பெறுமதியான நகைகள், பொருள்கள், ரொக்கப் பணம் என்பனவும் பறிமுதலாகின.

மிகவும் உடல் சோர்ந்த நிலையில் காயங்கள் தளம்புகளுடன் காணப்பட்ட இவர்கள் தமக்கு நடந்த இன்னல்களை, கொடுமைகளைப் பற்றி கண்ணீர் மல்க உதயன் செய்தியாளரிடம் விவரித்தனர்

அவர்கள் காங்கேசன்துறையில் 18 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டு, பின்னர் காரைநகர் கொண்டுவரப்பட்டு, நேற்று முன்தினம் [31-3-91] நயினாதீவுக் கடற்படை முகாமில் வைத்து விடுவிக்கப்பட்டனர்.

படையினரின் சித்திரவதைகளுக்கு உட்பட்டு உயிர் தப்பி வந்துள்ள அந்த அறுவரின் பெயர் விவரம் வருமாறு.

வடிவேலு இராஜேஸ்வரன் [22 வயது] - சுப்பர்மடம்

சரவணமுத்து அருளம்பலம் [45 வயது] - அல்வாய்

சின்னையா இளையதம்பி [23 வயது] - அல்வாய்

சிமியோன் விஜயதாஸ் [23 வயது] - வல்வெட்டித்துறை

கதிரன் ஜெயராசன் [30 வயது] - தொண்டமானாறு

வேல்முருகு மகாதேவன் [.. வயது] - கரணவாய் [அ-125]

## மன்னார் வவுனியாவில் ஊரடங்கு

கொழும்பு, ஏப் 2

மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் நேற்று நண்பகலில் இருந்து ஊரடங்குச் சட்டம் அமுல் நடத்தப்பட்டு வருவதாக ஸ்ரீ லங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. [உ-எ]

## வவுனியாவில் குண்டு வீச்சு! இருவர் பலி!!

லண்டன், ஏப் 2

வவுனியாவுக்கு வடக்கே நேற்று முன்தினம் முதல் தொடர்ந்து விமானத் தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

பொது மக்களின் சொத்துக்கள் பெருமளவில் நாசமாகியிருப்பதாகவும் அச் செய்திகள் தெரிவித்தன.

இதற்கிடையில் —

நேற்றுக் காலை 10 மணி முதல் நண்பகல் 2 மணிவரை வவுனியா, பம்மைமடு, பூவரசம்குளம் - குருக்கள் ஊர், புதுக்குளம் ஆகிய பகுதிகளில் கடுமையான குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

பம்மைமடுப் பகுதியில் இடம்பெற்ற குண்டு வீச்சில் தாயும் மகளும் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## இலங்கையில் புதிய பிரதிநிதி

யாழ்ப்பாணம், ஏப். 2

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் இலங்கை வதிவிடப் பிரதிநிதியாக திரு. பியறி வெற்றாச் நேற்று பதவியேற்றுள்ளார்.

முன்னர் இலங்கையில் வதிவிடப் பிரதிநிதியாகக் கடமையாற்றிய திரு. பிலி கொன்ரச இடமாற்றம் பெற்று எல்சல்வடோருக்குச் செல்வதை யடுத்தே புதியவர் பதவியேற்றுள்ளார். [உ-3]

## புதிய அரச அதிபர் யார்?

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் பதவிக்கு மூன்று அதிகாரிகளின் பெயர்கள் அடிபடுகின்றன.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகர், முல்லைத்தீவு அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம், கொழும்பு புனர்வாழ்வு அமைச்சைச் சேர்ந்த திரு கே. தயாபரன் ஆகிய மூவரில் ஒருவர் புதிய அரச அதிபராக நியமிக்கப்படக் கூடும் என்று பேச்சடிபடுகிறது.

இப்போதைய அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் இம்மாதம் பத்தாம் திகதி கொழும்புக்கு பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற்றுச் செல்கிறார் என்பது தெரிந்ததே [அ-3]

## கெரில்லாக்கள் வசம் நகரம்

இஸ்லாமபாத், ஏப் 2

ஆப்கனிஸ்தானில் உள்ள இராணுவ கேந்திர முக்கியத்துவம் பெற்ற ஹோஸ்ற் நகரம் 17 நாள் சண்டையின் பின்னர் முஜாஹுதீன கெரில்லாக்களினால், கைப்பற்றப்பட்டு விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

நகரை நிர்வகிப்பதற்கு 23 பேர் கொண்ட முஜாஹுதீன் கெரில்லாக் குழு ஒன்று அங்கு அமைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [உ]

## படையினரிடம் அகப்பட்ட பதினைந்து பொதுமக்கள்

கீரிமலையைச் சேர்ந்த சுமார் பதினைந்து பொதுமக்கள் இராணுவத்தினரிடம் சிக்கிக் கொண்டுள்ளதாக அறியவருகிறது.

கீரிமலை சடையம்மா சமாதி மடத்தடியில் படகுகள் மூலம் கடந்த வியாழக்கிழமை இறங்கிய படையினர் இவர்களை மனித கேடயமாக வைத்துக் கொண்டு முன்னேறும் நோக்குடன் கூட்டிச் சென்றதாக உறவினர் மூலம் தெரியவந்தது

அவர்கள் அனைவரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சீவல் தொழில் தெரிந்தவர்களைக் கொண்டு பனைகளில் இருந்து கள் இறக்குவித்து இராணுவத்தினர் பருகுவதாகவும் சொல்லப்படுகிறது. [அ-154]

## யாழ். பண்ணைப் பாலம் வெள்ளி முதல் பாவனைக்கு

பண்ணைப் பாலம் [தாம்போதி] எதிர்வரும் ஐந்தாம் திகதி வெள்ளியன்று போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட உள்ளது

கடந்த ஜூன் மாதம் ஆரம்பமான இராணுவ நடவடிக்கைகளை அடுத்து தாம்போதி மிகமோசமாகச் சேதமடைந்திருந்தது. அதனால் யாழ்ப்பாணத்துக்கும் தீவுப் பகுதிக்குமான போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

தாம்போதி தற்போது தற்காலிகமாகத் திருத்தப்பட்டு உள்ளது. எதிர்வரும் வெள்ளிக்கிழமை அது திறக்கப்பட்டதும், சைக்கிள், ஓட்டோ ஆகிய வாகனங்கள் மூலம் பயணம் செய்யக்கூடியதாக இருக்கும். [அ-3]

## சப்பாத்தில் $4\frac{1}{2}$ இலோ தங்கம்; ஆஸ்திரேலிய பிரசை கைது

கொழும்பு, ஏப் 2

இருபத்தியாறு லட்சம் ரூபா பெறுமதியான நாலரைக் கிலோ தங்கத்தைச் சப்பாத்துக்குள் மறைத்து வைத்துக் கொண்டு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய ஆஸ்திரேலிய பிரசை ஒருவரை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் நேற்றுக் காலை கைது செய்தனர்.

அந்த நபர் வானொலி உபகரணங்கள் சிலவற்றையும் கொண்டு வந்திருந்தார். இது பற்றி பொலீஸார் விசாரணை செய்து வருகின்றனர் [உ-எ]

## ஊர்காவற்றுறைப் பகுதியில் ஞாயிறன்று மோதல்!

யாழ்ப்பாணம், ஏப். 2

ஊர்காவற்றுறைப் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றன.

நண்பகல் 11 மணியளவில் சின்னமூளாய், மற்றும் பொன்னாச்சி கடைப் பகுதியூடாக படையினர் முன்னேற முற்பட்டபோது சுமார் 300 யார் தூரத்தில் வைத்து அவர்கள் மீது தாங்கள் தாக்குதல் நடத்தியதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

பிற்பகல் இரண்டு மணி வரை இடம்பெற்ற மோதல்களை அடுத்து படையினர் பெரும் இழப்புகளுடன் பின்வாங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது

மோதல் நடந்த சமயம் அப்பகுதியில் ஹெலிகொப்டர் ஒன்று தாக்குதல் நடத்தியது. கடற்பகுதியிலிருந்து பீரங்கிக் கப்பல்களும் தாக்குதல்களை நடத்தின [உ]

## 12 தமிழர்....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

லப்பட்டார்.

அதன் பின்னர் பெரும் எண்ணிக்கையான பொலீஸார் அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தி பல தமிழர்களைக் கைது செய்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [உ-3]

## மரண அறிவித்தல்

### திரு. நாகலிங்கம் விஜயராஜா

[ஓய்வு பெற்ற கட்டிடப் பரிசோதகர்]

ஆலங்குழாய், சண்டிலிப்பாயைச் சேர்ந்த நாகலிங்கம் விஜயராஜா அவர்கள் 30-03-91 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வநாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நாகலிங்கம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும், லிங்கேஸ்வரன் [உத்தரவு பெற்ற நில அளவையாளர்] நந்தேஸ்வரி, Dr. லோகேஸ்வரி [கால்நடை வைத்தியம், வட்டுக்கோட்டை] கௌரீஸ்வரன் [முன்னாள் நீர் வழங்கல் சபை], திலகேஸ்வரி [ஆசிரியை, சென் அன்றூஸ், நாவலப்பிட்டி], சிறீஸ்வரி, ஞானேஸ்வரன் [பாடசாலைகள் கட்டிடப் பகுதி, மட்டக்களப்பு], கெங்கேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜகோபால் [அரச விநியோகத்தர், கொழும்பு], Dr. நவரட்ணராஜா [தலைவர், விலங்கு வேளாண்மைத் துறை விவசாயபீடம் கிளிநொச்சி], ஜெகதாம்பாள், சக்கராயுதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஓம்பிரகாஷ், காயத்திரி, விஜயராஜசேமன், நதீரா கிருஷ்ணா, சுஜானி, சஞ்சயன், சரண்யா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 31-03-91 ஞாயிற்றுக்கிழமை மாலை 2.00 மணியளவில் சண்டிலிப்பாயில் நடைபெற்றன

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலங்குழாய், சண்டிலிப்பாய் [16303]

தகவல்: வி, லிங்கேஸ்வரன்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 02 - 04 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org